### கோவை அரசு உதவி பெறும் பள்ளியில்

# சாதி - உணவு பற்றி கேலி செய்ததால் மாணவன் தற்கொலை!

## தலைமை ஆசிரியர், 2 மாணவர்கள் மீது வழக்கு!

## உடலை வாங்க மறுத்து உறவினர்கள் மறியல்; காவல்நிலையம் முற்றுகை!

**கோவை, அக். 25 -**

**கோவையில் அரசு உதவி பெறும் பள்ளியில் மாட்டுக்கறி சாப்பிடுவது பற்றியும், சாதி பற்றியும் கேலி பேசியதால் மாணவன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த வழக்கில், அப்பள்ளி ஆசிரியர் கைது செய்யப்பட்டார். மேலும், தலைமை ஆசிரியர், 2 மாணவர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாணவன் சடலத்தை வாங்க மறுத்து உறவினர்கள் சாலைமறியல் போராட்டம் நடத்தி காவல்நிலையத்தை முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.**



கோவை பீளமேடு லால்பகதூர் காலனியை சேர்ந்தவர் அசோக்குமார் (45). கேரள மாநிலம் மூணாறில் உள்ள ஒரு தனியார் விடுதியில் சலவை தொழிலாளியாக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி கவுசல்யாதேவி (41). இவர், அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் தாய்மை பணியாளராக வேலை செய்து வருகிறார். இத்தம்பதிக்கு நேத்ரா (19) என்ற மகளும், அகிலன் (15) என்ற மகனும் உள்ளனர். நேத்ரா, கோவையில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் படித்து வருகிறார். அகிலன், பீளமேடு பகுதியில் உள்ள ஒரு அரசு உதவிபெறும் பள்ளியில் பிளஸ்1 படித்து வந்தார்.

இந்நிலையில், அகிலன் பள்ளிக்கு செல்ல விருப்பம் இல்லாமல் தொடர்ந்து விடுமுறை எடுத்து வந்துள்ளார். இது குறித்து அவரது தாயார் கேட்டபோது பள்ளியில் சாதியப்பாகுபாடு காரணமாக சக மாணவர்கள் தன்னிடம் பேசுவதில்லை என கூறியதாக தெரிகிறது. இதனிடையே கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமாக இருந்த அகிலனை, முறையான பயிற்சி வகுப்பில் சேர்த்துவிடுவதாக அவரது தாய் ஆறுதல் கூறியுள்ளார். இதையடுத்து, சரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை விடுமுறைக்கு பிறகு அகிலன் நேற்று முன்தினம் வழக்கம்போல் பள்ளிக்கு சென்றார்.

**தூக்கிட்டு தற்கொலை!**

மதிய உணவு இடைவேளையின்போது வீடு திரும்பினார். படுக்கை அறையை உள்பக்கமாக பூட்டிக் கொண்டு, அந்த அறையில் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த விவரம் அறியாமல், தாய் கவுசல்யா வழக்கம்போல் மதியம் 1 மணியளவில் உணவருந்த வீட்டுக்கு வந்தார். ஆனால், வீட்டின் பிரதான கதவு தாழ் போடாமல் வெறுமனே சாத்தி வைக்கப்பட்டிருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது பெட்ரூம் பூட்டப்பட்டிருந்தது.

இதனால், அக்கம் பக்கத்தினர் உதவியுடன் அறை கதவை திறந்து பார்த்தபோது, அகிலன் தூக்கில் பிணமாக தொங்கியதை கண்டு அலறி துடித்தார். தகவல் அறிந்த தும் பீளமேடு போலீசார் வந்து அகிலன் சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையே அகிலன் தற்கொலைக்கு காரணமான பள்ளி நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகிலனின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் நேற்று முன்தினம் இரவு பீளமேடு போலீஸ் ஸ்டேஷனில் குவிந்தனர்.

காவல்நிலையத்தை முற்றுகையிட்டு கோஷம் எழுப்பினர். சாதிய பாகுபாடு குறித்து பேசிய ஆசிரியர், இதற்கு உடந்தையாக இருந்த தலைமை ஆசிரியர் மற்றும் சக மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். இதையடுத்து, போலீசார், அப்பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியர் மற்றும் இரண்டு மாணவர்கள் என 4 பேர் மீது வழக்கு பதிவுசெய்தனர். முதல்கட்ட விசாரணைக்கு பிறகு, நேற்று காலை அப்பள்ளி ஆசிரியர் பீளமேட்டை சேர்ந்த விஜயகுமாரை (45) கைது செய்தனர்.

**உறவினர்கள் போராட்டம்!**

தொடர்ந்து தலைமை ஆசிரியர் அருண்குமார் (45) மற்றும் 2 மாணவர்களை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆனாலும், அகிலன் குடும்பத்தினர், தலைமை ஆசிரியர் அருண்குமார் மற்றும் இதர மாணவர்களை கைது செய்து சிறையில் அடைத்தால்தான் அகிலன் சடலத்தை வாங்குவோம் எனக்கூறி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று இரண்டாவது நாளாக போராட்டம் தொடர்ந்தது. உறவினர்களும், முற்போக்கு இயக்கத்தினரும் காவல்நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இதனால் நேற்று பிரேத பரிசோதனை நடத்தப்படவில்லை.

இந்நிலையில், பள்ளி தலைமை ஆசிரியர் அருண்குமாரை கைது செய்ய வலியுறுத்தி உறவினர்கள் நேற்று காலை திடீரென அவினாசி சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து, அங்கிருந்த போலீசார் உறவினர்களை சமாதானப்படுத்தினர். கோவை மாநகர வடக்கு துணை கமிஷனர் தங்கதுரை தலைமையில் பேச்சுவார்த்தை நடத்த காவல் நிலையத் திற்கு அழைத்துச்சென்றனர்.

அப்போது, தலைமை ஆசிரியரை கைது செய்த பின்னரே உடற்கூறாய்வு மேற்கொள்ள ஒப்புதல் வழங்குவோம் என உறவினர்கள் கூறினர். இதுகுறித்து மாணவரின் தந்தை அசோக்குமார் கூறுகையில், "ஆசிரியர் வகுப்பறையில் ஸ்காலர்ஷிப் குறித்து கேட்டபோது எனது மகனின் சாதி அடையாளம் தெரிந்துள்ளது. அப்போது ஆசிரியர் மாட்டு இறைச்சி உண்பது குறித்தும், சக மாணவர்கள் முன்பு கேலி செய்யும் வகையில் கேட்டுள்ளார்.

எனது மகனின் சாதி அடையாளம் குறித்து தெரிந்த பின்னர், சக மாணவர்கள், எனது மகனுடன் பேசுவதை தவிர்த்து வந்துள்ளனர். இதுகுறித்து பள்ளியில் முறையிட்டபோது அப்படி எதுவும் இல்லை, நாங்கள் விசாரிக்கிறோம்.. எனக்கூறினர். ஆனால், பள்ளி ஆசிரியர்கள், சாதிய மனோநிலையில் இருந்துள்ளனர். எனது மகன் அகிலன் இறப்பு குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

தற்கொலைக்கு காரணமான அனைவர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், எனது மகனின் உடலை வாங்க மாட்டோம்" என்றார். இந்த சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பள்ளி மாணவர்கள் வட்டாரத்தில் பெரும் பீதியை கிளப்பியுள்ளது.

**சாதியால் மகனை தனிமைப்படுத்தினர்: போலீசில் தாய் புகார்**

மாணவன் அகிலனின் தாய் பீளமேடு போலீசில் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது: என் மகன் அகிலன் பள்ளியில் சேர்ந்ததில் இருந்து அடிக்கடி விடுமுறை எடுப்பதும், பள்ளிக்கு செல்ல பிடிக்க வில்லை என்றும் கூறியும் வந்தார். இரண்டு மாதம் முன்பு பள்ளியில் ஸ்காலர்ஷிப் சம்பந்தமாக விசாரித்தபோது சாதி பற்றி தெரிந்துக்கொண்டு என்னிடம் யாரும் பேசுவதில்லை எனக்கூறி, எனது மகன் என்னிடம் அழுதான்.

கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் இருந்ததால் பயிற்சியில் சேர்த்து விடுவதாக கூறி சமாதானம் செய்தேன். நேற்று முன்தினம் நான், பணிக்கு சென்று திரும்பியபோது மகன் அகிலன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. எனது மகன் நேற்று முன்தினம் பள்ளிக்கு சென்றானா? என்று தெரியவில்லை. ஏற்கனவே வகுப்பில் பிரச்னையால் மன வேதனையுடன் இருந்து வந்துள்ளான். எனது மகன் இறப்பு குறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு புகார் மனுவில் கூறியுள்ளார்.

**த.வெ.க. எம்.எல்.ஏ.வை முற்றுகையிட்ட உறவினர்கள்!**

கோவை பீளமேடு போலீஸ் ஸ்டேஷனில், மாணவன் தற்கொலை விவகாரம் குறித்து விசாரிக்க, சிங்காநல்லூர் தொகுதி த.வெ.க., எம்.எல்.ஏ ஸ்ரீகிரிபிரசாத் நேற்று மதியம் வந்தார். அப்போது, மாணவன் அகிலன் உறவினர்கள் அவரை முற்றுகையிட்டனர். கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத்து எடுத்தனர். அவர், பதிலளிக்க முடியாமல் திணறினார். பின்னர், வேறு வழியின்றி அவசரம் அவசரமாக காரில் ஏறி தப்பிச் சென்றார்.

**விசாரணை அதிகாரியை மாற்ற கோரிக்கை**

போராட்டம் நடத்தும் மாணவனின் உறவினர்களிடம் போதிய முகாந்திரம் இருந்தால், தலைமை ஆசிரியரை கைது செய்கிறோம் என்று போலீசார் தெரிவித்தனர். ஆனால், மாணவனின் பெற்றோர் தலைமை ஆசிரியரையும் கைது செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். போலீசார் கடும் அழுத்தம் கொடுப்பதை உணர்ந்த அகிலனின் உறவினர்கள், போலீசாருடன் கடும் வாக்குவாதம் செய்தனர். மேலும், விசாரணை அதிகாரியை மாற்ற வேண்டும் என வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

**போலீஸ் கமிஷனருக்கு ஆணையம் நோட்டீஸ்**

மாணவர் தற்கொலை தொடர்பாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத் தலைவர் (பொ) அண்ணாமலை, உறுப்பினர்கள் செல்வக்குமார், இளஞ்செழியன், ஆனந்தராஜா ஆகியோர் கொண்ட சிறப்பு அமர்வு கோவை மாநகர கமிஷனர் (பொ) ரமயா பாரதி, ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நோட்டீஸ் அனுப்பி உள்ளனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; 125 நாள் வேலை திட்டத்தை 150 நாளா உயர்த்தி அதற்காக 100 கோடி ரூபாய் கூட ஒதுக்கி த.வெ.க. அரசு உத்தரவு போட்டிருக்கே. இதை யாருமே பாராட்ட வில்லையே

**பட்டணம் :** **ஆமாமய்யா; நீ சொல்றது சரிதான். எப்படி பாராட்டுவாங்க. 125 நாளை 150 நாளா உயர்த்த ஆகும் செலவு ரூபாய் 9 ஆயிரம் கோடிக்கும் மேல ஆகுமாம். சும்மா ஜ-வாஷ் பண்ற மாதிரி வெறும் 100 கோடி ரூபாய் ஒதுக்கி மக்களை ஏமாற்றப் பார்க்குது இந்த அரசு. என்ன பண்றது! கேக்குறதுக்கு யாருமில்லை.**

### த.வெ.க. அரசின் அவலங்களை மறைக்க 'ரீல்ஸ்' மட்டுமே போதாது!

# மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஆட்சியை நடத்த வேண்டும்!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**தூத்துக்குடி, அக். 25 -**

**சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பின்மை, போதைப்பொருள் புழக்கம், விலைவாசி உயர்வு என அனைத்திலும் தோல்வியடைந்த த.வெ.க. அரசின் அவலங்களை மறைக்க ரீல்ஸ் மட்டுமே போதாது. மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஆட்சியை நடத்த வேண்டும் என கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ஆவேசத்துடன் குறிப்பிட்டார்.**



தூத்துக்குடியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி, அவர்கள் கூறியதாவது:-

த.வெ.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, தினமும் பல்வேறு கொலைக் குற்றச் சம்பவங்கள், பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் எனத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தினமும் இதைப் பற்றிப் பேசி எங்களுக்கே மனவேதனை ஏற்படும் அளவுக்கு, தொடர்ந்து இதுகுறித்து ட்வீட் செய்தும் பேசியும் வருகிறோம்.

ஆனால், அரசுப் பொறுப்பில் இருக்கக்கூடிய யாரையும் இத்தகைய சம்பவங்கள் பாதிப்பதாகத் தெரியவில்லை. இது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இவர்கள் என்ன ஆட்சி நடத்துகிறார்கள் என்பதே எனக்குப் புரியவில்லை. சட்டம் ஒழுங்கைக்கூடச் சீர்செய்ய முடியாத அளவுக்குத் திறமையின்றி, இன்று ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் பெரிய வாக்குறுதிகளையும் வசனங்களையும் பேசி ஆட்சிக்கு வந்தார்கள். அனைவருக்கும் நான் பாதுகாப்பாக இருப்பேன் என்று முதலமைச்சர் கூறினார். ஆனால், இன்று யாருக்குமே பாதுகாப்பு இல்லாத நிலை தமிழ்நாட்டில் உருவாகியுள்ளது. இது எங்கு போய் முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

ஏனென்றால், ஒவ்வொரு சம்பவமும் வெளியில் வரும்போது கேள்விகள் அதிகமாக எழுகின்றன. அதனால், எல்லாவற்றையும் மூடி மறைத்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். செஞ்சியில் ஒரு குழந்தை காணாமல் போய் எத்தனை நாட்களாகின்றது. ஆனால் இன்னும் காவல்துறை என்ன செய்துகொண்டிருக்கிறது. அந்தக் குழந்தைக்கு என்ன ஆனது என்பது கூட யாருக்கும் தெரியவில்லை.

**இது ஆட்சியா; அலங்கோலமா?**

இப்படித்தான் இன்று அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலமைச்சருக்கு மக்கள் மீது அக்கறை இருக்கிறதா, இல்லையா என்பதுகூடத் தெரியவில்லை. ஏனென்றால், இது நேரடியாக முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் வரக்கூடிய துறை காவல்துறை. ஆனால், இத்தனை குற்றச் சம்பவங்கள் தினமும் நடைபெறுகின்றன. ஒரு நாளைக்கு ஒரு குற்றச் சம்பவம் என்றுகூட இல்லை. ஒரு நாளில் எத்தனை குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. சில நேரங்களில், 24 மணி நேரத்திற்குள் 10 கொலைகள் மற்றும் பல்வேறு குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

ஆனால், இதுகுறித்து எந்தக் கவலையும் இல்லாமல், இந்த ஆட்சியில் இருப்பவர்கள் வீர வசனங்களைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களைக் குறை சொல்வதை மட்டுமே தங்களுடைய பணியாக வைத்திருக்கிறார்களே தவிர, தங்களுடைய பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கிறார்கள். தங்களுடைய பொறுப்பு என்ன என்பதைக்கூட உணராமல் செயல்படக்கூடிய ஓர் ஆட்சிதான் இன்று நடைபெற்று வருகிறது.

இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தார்களோ, அவை அனைத்தும் பொய்யாகியுள்ளன. இங்கு ரீல்ஸ் கவர்மெண்ட்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரீல்ஸில் மட்டுமே ஆட்சி நடத்திவிடலாம் என்று நினைக்கிறார்களே தவிர, அவர்கள் கொடுத்த எந்த ஒரு வாக்குறுதியையும் நிறைவேற்றுவதில்லை.

இன்று விலைவாசி உயர்ந்துள்ளது, குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. போதைப்பொருட்கள் அவர்களுடையகட்சிநிர்வாகிகளின் வீடுகளிலிருந்தே கைப்பற்றப்படுகின்றன. இன்று போதைப்பொருள் பிரச்சினை என்பது நமது சமூகத்தில் மிகப்பெரிய பிரச்சினையாக மாறிக்கொண்டிருக்கிறது.

யாருக்குமே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. மின்வெட்டு அந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது; மின்சாரமே இல்லை. விவசாயிகள் ஒருபுறம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். மதுப்பழக்கத்தைக் குறைப்போம், மது அருந்துவதைக் குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்கள். அதையும் செய்யவில்லை. அதனால் ஏற்படக்கூடிய குற்றங்களையும் கட்டுப்படுத்துவதில்லை. இது ஆட்சியா, அலங்கோலமா என்றே தெரியவில்லை.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

### கோவையில் மாணவர் உயிரிழந்த விவகாரம்:

# சாதியப் பாகுபாட்டைத் தூண்டிய ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, அக். 25 –

மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம். எச்.ஜவாஹிருல்லா எம். எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :–



கோவையில் பிளஸ் 1 மாணவர் உயிரிழந்த சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. இந்தத் துயரமான சம்பவத்தில், சாதிய வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியதாகக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர் அருண் குமார் மற்றும் ஆசிரியர் விஜய குமார் ஆகியோர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளதாக தெரிய வருகிறது.

கல்வி நிறுவனங்கள் சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் மனிதநேயத்தையும் வளர்க்க வேண்டிய இடங்களாகும். குறிப்பாக, ஆசிரியர்கள் மாணவர்களிடையே சமத்துவ உணர்வையும் சமூகநீதிக் கொள்கைகளையும் விதைக்க வேண்டியவர்கள். அத்தகைய பொறுப்பில் இருப்பவர்கள் மீது சாதியப் பாகுபாட்டைத் தூண்டும் வகையில் செயல்பட்ட குற்றச்சாட்டு எழுந்திருப்பது கல்வித் துறைக்கே தலைகுனிவை ஏற்படுத்துகிறது.

சாதியின் பெயரால் ஒரு மாணவர்கூட அவமானப்படுத்தப்படுவதோ, அச்சுறுத்தப்படுவதோ, ஒதுக்கப்படுவதோ அனுமதிக்க முடியாது. மாணவர்களின் பாதுகாப்பையும் மனநலத்தையும் உறுதிப்படுத்த வேண்டிய பள்ளிகளில் சாதியப் பாகுபாட்டுக்கு இடமளிப்பது அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் சமத்துவக் கோட்பாட்டுக்கும் சமூகநீதிக்கும் எதிரானதாகும்.

அதேவேளையில், மாணவரின் உயிரிழப்புக்கான உண்மையான காரணங்களையும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளையும் காவல்துறையினர் எவ்வித அரசியல் அல்லது நிர்வாக அழுத்தங்களுக்கும் இடமளிக்காமல் நேர்மையாகவும் முழுமையாகவும் விசாரிக்க வேண்டும். வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுகள் உரிய ஆதாரங்களின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு, பள்ளிகளில் சாதியப் பாகுபாட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும். மாணவர்களிடம் சமத்துவம், மனிதநேயம், சகோதரத்துவம் ஆகிய விழுமியங்களை வளர்ப்பதற்கான விழிப்புணர்வையும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும் வலுப்படுத்த வேண்டும்.

ஒரு மாணவரின் உயிரிழப்பும், ஒரு மாணவரின் கண்ணியமும் அலட்சியப்படுத்தப்படக் கூடாது. சாதியப் பாகுபாடற்ற கல்விச் சூழலை உருவாக்குவது அரசின் கடமை மட்டுமல்ல; அது நமது சமூகத்தின் எதிர்காலம் குறித்த பொறுப்புமாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில்

# மும்பை தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## பொறுப்புக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெறுகின்றது!

*மும்பை, அக். 25 -*

*மும்பை தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் இன்று (25.10.2026 - ஞாயிறு) மாலை 6.00 மணிக்கு தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன் பொற்கோ, மாறன் ஆரியசங்காரன், ம.நீதி துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*கழக ஆக்கப்பணிகள் மற்றும் வரவு / செலவு கணக்கு சமர்ப்பித்தல் வருகிற நவம்பர் மாதம் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞரணி செயலாளர், தமிழக எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாவது பற்றியும் பேசி முடிவு எடுக்கப்பட உள்ளதால் கிளைக்கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு கேட்டுக் கொண்டுள்ளார்.*